நெல்லியாளம் நகராட்சி அலுவலகம்,
பந்தலூர், நீலகிரி மாவட்டம்.

# சாதாரண கூட்டம் 08/03/2019 வெள்ளிக்கிழமை

**பொருள் எண்.1**

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986 (சட்ட எண்.29/1986)-ல் பிரிவு 3,6 மற்றும் 25-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306-ன் படி 2019-ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12-ன் கீழ் பிளாஸ்டிக் மொத்த விற்பனை, உற்பத்தி செய்தல், சேமித்து வைத்தல், விற்பனைக்கு எடுத்துச் செல்லுதல், நெகிழி பயன்படுத்துதல் முதலியன தடை செய்யப்பட்டு அபராத தொகை விதிக்கபட்டுள்ளதை கீழ்க்கண்டவாறு உப விதிகள் ஏற்படுத்தலாம்.

(i) **செயலாக்க அதிகாரி:** நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவார்.

(ii) **ஆய்வு நடத்தும் அதிகாரி:** ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவு பணிமேற்பார்வையாளர்கள், துப்புரவு ஆய்வாளர், நகர்நல அலுவலர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர்.

(iii) **மேல்முறையீட்டு அலுவலர்:** இந்த உப விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார்.

(iv) **தண்டனைகள் விதிக்கும் முறைகள்:**
ஷைசட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள ஷரத்துக்களை மீறுபவர்களுக்கு உடனடி ஸ்தல அபராதம், குடிநீர் இணைப்பு துண்டித்தல், பொருள்களை பறிமுதல் செய்தல் அச்சம் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கான உரிமம் ரத்து செய்தல் (D&O) முதலியன தண்டனை முறைகள்

**2. வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு :**

1. மொத்த சேமிப்பாளர் / விநியோகிப்பாளர்

a) 1 ச.அடி முதல் 500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
b) 501 ச.அடி முதல் 1000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
c) 1001 ச.அடி முதல் 1500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
d) 1501 ச. அடி முதல் 2000 ச. அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
e) 2000-ம் அதற்கு மேல்.

**3. வணிக வளாகங்கள்:**

a) பெரிய மற்றும் சிறிய துணிக்கடைகள்/
b) பல்பொருள் அங்காடிகள் பெரியது.
c) திரையரங்குகள்
d) அரசு மதுபானக்கடை, மதுபான விற்பனைக் கூடங்கள்(BARS) மனமகிழ்மன்றம் முதலான இதர இனங்கள்.
e) கல்வி நிறுவன வளாகங்கள்
f) அரசு, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் வளாகங்கள்
g) திருமண மண்டபங்கள், தங்கும் விடுதிகள் முதலானவை,
h) பெரிய, நடுத்தர மற்றும் சிறிய தொழிற்சாலைகள்
மளிகைக் கடைகள், காய்கறிக்கடைகள், பழக்கடைகள், மருந்துக்கடைகள், பழச்சாறு விற்பனை கடைகள், இறைச்சி மற்றும் மீன் கடைகள் முதலானவைகள்.

5. சிறிய வணிக விற்பானையாளர்கள், தெருவோர கடைக்காரர்கள் மற்றும் இதர வணிகம் செய்பவர்கள்.

6. இந்த துணை விதியை மீறினால் செலுத்தும் அபராதம், இந்த துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கு பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கை காலம் 30 நாட்கள் ஆகும். அதற்க்கும் பிறகு இந்த துணை விதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவார்.

7. துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசு படுத்துவர் அட்டவணை-II –ல் குறிப்பிட்டுள்ளபடி அபராத தொகை கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில் அவருக்கு எதிராக கடையை / நிறுவனத்தை அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் / மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 / பொது சுகாதார சட்டம் 1939-ன் படி வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

8. மேல் முறையீட்டுக்கு உரிமை

நெல்லியாளம் நகராட்சியின் இந்த துணை விதிகளில் பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்ய உரிமையுள்ளவர்கள் ஆவர். இந்த துணை விதிகள் நெல்லியாளம் நகர் மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வந்துள்ளன.

தண்டனைகள் விபரம்

பிரிவு 306 (28-A) இன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்

| வ. எண். | குற்றங்கள் | முதன் முறையான குற்றத்திக்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்க்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்க்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| 1. | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி எறியப்பட்ட நெகிழியை சேமித்தல்,வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ஐந்தாயிரம் ரூபாய் | பத்தாயிரம் ரூபாய் | இருபத்தைந்தாயிரம் ரூபாய் |
| 2. | வணிக வாளகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள்அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | இரண்டாயிரம் ரூபாய் | ஐந்தாயிரம் ரூபாய் | இருபத்தைந்தாயிரம் ரூபாய் |
| 3. | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | ஓராயிரம் ரூபாய் | இரண்டாயிரம் ரூபாய் | ஐந்தாயிரம் ரூபாய் |
| 4. | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ஐநூறு ரூபாய் | ஓராயிரம் ரூபாய் | இரண்டாயிரம் ரூபாய் |

<u>அலுவலக குறிப்பு</u>

அனுமதி அளிக்கலாம்.

<u>பொருள் எண்.2</u>

நெல்லியாளம் நகராட்சியில் உள்ள பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் சுகாதாரமாக பாதுகாப்பாக குடிநீரை அருந்த பயன்படுத்தப்படும் வாட்டர் டாக்டர் இயந்திரம் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு 07/03/2019 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விலைப்புள்ளி அளித்தவர் பெயர் | விலை விகிதம் ரூ. |
|---|---|---|
| 1 | M/s Himalaya Water Technologies | 22805/– |
| 2 | M/s.Erwina Water Technologies | 23482/– |

<u>அலுவலக குறிப்பு</u>

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில், குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s Himalaya Water Technologies நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கவும், பட்டியல் தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.3**

நெல்லியாளம் நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் வருகை பதிவு கணிணி மயமாக்க பையோமெட்ரிக் கருவிகள் 2 எண்ணிக்கை சப்ளை செய்தல் மற்றும் மேற்படி கருவிகள் கணிணியுடன் இணைக்கும் பணிகள் மேற்கொள்ள 07/03/2019 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விலைப்புள்ளிகள் விவரம் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | M/s.ஸ்டார் கம்யூட்டர்ஸ், பந்தலூர் | 247000/– |
| 2 | M/s.கிங்ஸ் கம்யூட்டர் சென்டர், பந்தலூர் | 245800/– |
| 3 | M/s.ஹைடெக் கம்யூட்டர்ஸ், பந்தலூர் | 247550/– |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்தவிலை விலைப்புள்ளி அளித்துள்ள M/s.கிங்ஸ் கம்யூட்டர் சென்டர், நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கவும், பட்டியல் தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.4**

நெல்லியாளம் நகராட்சியின் 2018–2019 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு திட்டம் மற்றும் 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டம் தயார் செய்து தனி அலுவலரின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

ஒப்புதல் வழங்கலாம்

**பொருள் எண்.5**

கோயம்புத்தூர் நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு, இந்நகராட்சி சார்பில் 2018–19 ஆம் ஆண்டு சந்தாத் தொகை ரூ.20000/– செலுத்துமாறு பயிற்சி நிறுவன இயக்குநர் தனது 28/02/2019 ஆம் தேதிய கடித எண்.848/2018/அ2–ல் தெரிவித்துள்ளார். அதன்படி ரூ.20000/–த்திற்கு வங்கி வரைவோலை செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

2019 ஆம் ஆண்டு சாதாரண மக்களவைத் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருப்பதால், அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**பொருள் எண்.6**

நெல்லியாளம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் 01/04/2018 முதல் 31/03/2019 முடிய ஒராண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநர்கள் இரண்டு நபர்களை பணியமர்த்துதல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, திரு.பிஜு, J.B.டிரேடர்ஸ், பந்தலூர் ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வந்தது. தற்போது மேற்படி ஒப்பந்த காலம் 31/03/2019 உடன் முடிவடைவதால் 01/04/2019 முதல் மேற்படி ஓட்டுநர்களை ஒப்பந்தப்புள்ளி கோரி பணியமர்த்த தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக கு றிப்பு**

அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண். 7**

நெல்லியாளம் நகராட்சி பொதுப்பிரிவில் 01/04/2018 முதல் 31/03/2019 முடிய ஒராண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் புள்ளிவிவர குறிப்பாளர் ஒருநபரை பணியமர்த்துதல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, M/s.கிங்ஸ் கம்யூட்டர் சென்டர் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வந்தது. தற்போது ஒராண்டு முடிவடைந்த நிலையில், 2019 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் நடைபெற உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத நிலை உள்ளது. எனவே நெல்லியாளம் நகராட்சியில் புள்ளிவிவர குறிப்பாளர் பணியிடம் தோற்றுவிக்கப்படாத நிலையிலும், பணியின் அவசியம் கருதியும் மறு உத்திரவு வரும் வரையில் M/s.கிங்ஸ் கம்யூட்டர் சென்டர் நிறுவனத்தின் மூலம் மேற்படி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவுத்தொகை ரூ.2.61/– லட்சத்திற்கும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக கு றிப்பு**

அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.8**

நெல்லியாளம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பொதுசுகாதார பணிகள் குறித்து புகைப்படம் எடுத்து நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் 2019–2020 ஆம் ஆண்டிற்கு புகைப்படம் எடுக்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.3.50/– லட்சத்திற்கு தனிஅலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.9**

இந்நகராட்சி பொதுப்பிரிவில் கணிணிகள் பயன்பாட்டில் உள்ள UPS கருவி பழுதடைந்துவிட்டதால், UPS பேட்டரிகளில் சார்ஜ் இல்லாமல் அடிக்கடி மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு கணிணிகள் அனைத்தும் Shut down ஆகிவிடுகின்றன. இதனால் வரிவசூல் மையத்தில் பொதுமக்களுக்கு வரிவசூல் செய்து இரசீதுகள் வழங்க மிகவும் சிரமமாக உள்ளது. மேலும் பொதுப்பிரிவு, பொதுசுகாதாரப்பிரிவு மற்றும் வருவாய் பிரிவுகளில் UTIS மூலம் கணிணியில் மேற்கொள்ளப்படும் அனைத்து பணிகளும் உரிய நேரத்தில் செய்து முடிக்க இயலாத நிலை ஏற்பட்டு வருகிறது. UPS கருவியின் மின்இணைப்பு துண்டிப்பால் கணிணிகள் Shoutdown ஆகிவிடுவதால் கணிணிகளிலும் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு வருகிறது. எனவே மேற்படி UPS கருவியின் அவசியம் கருதி UPS கருவி பழுது சரிசெய்யவும், UPS பேட்டரிகள் புதிதாக மாற்றியமைக்கவும் மற்றும் கணிணிகளுக்கான UPS ஒயரிங் பழுதுகள் சரிசெய்து மேற்படி பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.4.00/– லட்சத்திற்கும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

வரிவசூல் மையத்தில் வசூல் பணிகள் தடையில்லாமல் நடபெறவும், கணிணிகளில் அடிக்கடி ஏற்படும் பழுதுகளை தவிர்த்திடவும், நகராட்சி அலுவலக கணிணி பணிகள் அனைத்தும் தடையில்லாமல் நடைபெற ஏதுவாக தற்போது இந்நகராட்சி கணிணி பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு வரும் M/s.கிங்ஸ் கம்யூட்டர் சென்டர் நிறுவனத்தின் மூலம் மேற்படி UPS பழுது நீக்கவும், இதர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான செலவுத்தொகை வழங்கவும் அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.10**

நெல்லியாளம் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கணிணிகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்யவும், கணிணிகளுக்கான உதிரி பாகங்கள் சப்ளை செய்யும் பணிக்கு 01/04/2018 முதல் 31/03/2019 முடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, M/s.கிங்ஸ் கம்யூட்டர் சென்டர் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது 31/03/2019 உடன் மேற்படி பணிக்கான ஒப்பந்தக்காலம் முடிவடைந்த நிலையில், ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தின்படி 01/04/2019 முதல் 31/03/2020 முடிய கணிணிகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்தல் மற்றும் கணிணிகளுக்கான உதிரி பாகங்கள் சப்ளை செய்தல் பணி மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து M/s.கிங்ஸ் கம்யூட்டர் சென்டர் நிறுவனத்திடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே 01/04/2019 முதல் 31/03/2020 முடிய M/s.கிங்ஸ் கம்யூட்டர் சென்டர் நிறுவனத்தின் மூலம் மேற்படி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவுத்தொகை ரூ.5.00/– லட்சத்திற்கு தனிஅலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக கு றிப்பு**

அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.11**

நெல்லியாளம் நகராட்சிக்கு சொந்மான புதிய பேரூந்து நிலைய கட்டண கழிப்பிடம் 01/04/2019 முதல் 31/03/2021 முடிய மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு விட 08/03/2019 அன்று இந்நகராட்சி அலுவலகத்தில் நடைபற்ற பொது ஏலத்தில் திரு.எஸ்.பிரபாகரன், த/பெ.சிவலிங்கம் என்பவரை தவிர வேறு ஒருவரும் கலந்து கொள்ளாத நிலையில் கடந்த ஆண்டின் ஏலத்தொகை ரூ.24600/–ஐ காட்டிலும் கூடுதலாக ரூ.10200/– அதிகரித்து தற்போது ரூ.34800/–க்கு ஏலத்தொகையை கோரியுள்ளார். எனவே ஏலுத்தினை முடிவு செய்ய தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

திரு.சி.பிரபாகரன், த/பெ.சிவலிங்கம்,
க.எண். 21/127, அத்திகுன்னா, உப்பட்டி மாதவாடகை ரூ.2900/–

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பொது ஏலத்தில் எவரும் கலந்துகொள்ளாத நிலையில் திரு.எஸ்.பிரபாகரன், த/பெ.சிவலிங்கம் என்பவர் கோரியுள்ள அதிகபட்ச ஏலத்தொகையை அனுமதித்து பணி உத்திரவு வழங்கலாம்.

**பொருள் எண்.12**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பந்தலூர் புதிய பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்ய ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு யாரும் ஏலம் எடுக்காத நிலையில் நகராட்சியின் மூலம் நுழைவு கட்டண இரசீதுகள் அச்சிடப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. தற்போது நுழைவு கட்டண இரசீதுகள் முடிவடைந்த நிலையில் புதிதாக இரசீது புத்தகங்கள் அச்சிட்டு வாங்க உத்தேச செலவுத்தொகை ரூ.30000/–க்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.13**

நெல்லியாளம் நகராட்சி அலுவலகத்திற்கு தேவையான டேபிள், மேஜை மற்றும் அலுவலக விளம்பர பலகை ஆகிய பர்னிச்சர்கள் வாங்க ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.60000/–த்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி அளிக்கலாம்

**பொருள் எண்.14**

உப்பட்டி பூதானக்குன்னு லட்சுமணன் பம்பு அறை அருகில் இன்டர்லாக் சாலை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.80 தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி அளிக்கலாம்

**பொருள் எண்.15**

இந்நகராட்சிக்கு சொந்தமான அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தும் TN43Z4302 எண் கொண்ட பொளிரோ வாகனத்திற்கு உதிரிபாகங்கள் பழுதடைந்துள்ளதால் கிரீஸ், லைனர் பேடு, பேரிங், ஜாயின் ஸ்டார், போல்டு ஜாயிண்ட், கை புஸ் போன்ற பாகங்கள் பழுதடைந்துள்ளதால் அவற்றை பணி மனைக்கு கொண்டு சென்று பழுது பார்க்க உத்தேச செலவு தொகை ரூ.16000/–த்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி அளிக்கலாம்.

**தனி அலுவலர்**
**நெல்லியாளம் நகராட்சி**